**CC.No.26/2020.**
**P.W.1**

| | | |
|---|---|---|
| வீரபாண்டி | த/பெ. பொன்னுசாமி | Date: 20.09.2023 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 on today.

**(Accused present)**

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் வரவழைக்கப்பட்டு

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** :

1. களக்காடு சொக்கலிங்கம் மருத்துவமனை விபத்து நடந்த இடத்தில் இருந்து சுமார் 15 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. மருத்துவமனை சென்று மறுநாள் காலை 8.00 மணிக்குத்தான் மயக்கம் தெளிந்தது. நான் மயக்கம் தெளிந்த பிறகு போலீசாரிடம் கொடுத்த வாக்குமூலம் ஞாபகம் உள்ளது. பார்வதி மருத்துவமனைக்கு நான் காரில்தான் சென்றேன். அதே காரில்தான் எதிரியையும் மருத்துவமனைக்கு ஏற்றி சென்றார்கள் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி காரை அ.சா.2 தான் ஏற்பாடு செய்தார். பைக் மீது மோதிய கார் வடக்கில் இருந்து தெற்கு நோக்கி வந்தது. மேற்படி கார், பைக் மீது மோதியதை நான் பார்க்கவில்லை. காரில் வந்தவர்தான் என்னை மருத்துவமனைக்கு அழைத்து சென்றார் என்றால் சரியல்ல. நான் எதிரி ஓட்டிவந்த பைக்கில் பின்னாடி இருந்து அதிவேகமாக சென்று காரில் மோதியதால் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. சம்பவத்தை அ.சா.2 பார்த்ததால் அவருக்கத்தான் தெரியும். நான் நஷ்டயீடு கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் நஷ்டயீடு பெறுவதற்கு வேண்டி எதிரி மீது புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**CC.No.26/2020.**
**P.W.2**

| | | |
|---|---|---|
| பன்னீர்செல்வம் | த/பெ. சிவன் | Date: 20.09.2023 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 on today.

**(Accused present)**

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் வரவழைக்கப்பட்டு

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** :

1. நான் சம்பவத்தை நேரடியாக பார்த்தேன். அ.சா.1 மருத்துவமனைக்கு போகும்போது நான் உடன் செல்லவில்லை. காயம்பட்டவரின் வீட்டிற்கு நான்தான் தகவல் சொன்னேன். அ.சா.1 ம், எதிரியும் நண்பர்கள் தான்.